## 28.26 ஊரக வீட்டுவசதி குறித்து உயர் நிலைக் குழுவின் பரிந்துரை மீதான அரசின் ஆணைகள்

வீட்டுவசதி (ம) நகப்புற வளர்ச்சி (கூட்.1) துறை

அரசாணை (நிலை) எண். 292 நாள் : 14.07.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 340, ஊரக வளர்ச்சித் துறை நாள்: 03.12.97.
2. அரசு செலாளர் ஊரக வளர்ச்சித்துறை அவர்களிடமிருந்து பெறப்பட்ட நேர்முக கடித எண். 14532/சி4/99, நாள்: 11.05.99.

**ஆணை**

இந்திய அரசியலமைப்பு சட்டம், அட்டவணை A–ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருட்கள் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏ ''ஊரக வீட்டுவசதி'' என்ற தலைப்பில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்து பார்வை ஒன்றில் கண்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டது. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.01.1999 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து 03.05.1999 மற்றும் 04.05.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு அரசாணை வெளியிடுமாறு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சித்துறை இத்துறையை கேட்டுக் கொண்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்டுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை இத்துறை நன்கு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்து ஆணைகள் வெளியிடுகிறது.

**கிராம ஊராட்சிகள்**

(1). வீடு இல்லாதவர்களுக்கு வழங்கப்படக்கூடிய வீட்டுமனைகள் மற்றும் ஊரக வீட்டுவசதி திட்டங்களின் கீழ் வழங்கப்படக்கூடிய வீடுகளுக்கான ஒட்டுமொத்தத் தேவையை கணக்கிட்டு விவரங்களை பராமரித்தல்.

(2). வீட்டுமனைகள் / வீடுகள் கட்ட தகுந்த நிலங்களை கண்டறிந்து அதன் விவரத்தை பராமரித்தல்.

(3). வீடுகட்டுவதற்கான மனைகளை பகிர்ந்தளிக்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உதவுதல்.

(4). ஊரகப்பகுதியில் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டுவசதித் திட்டங்களில் தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

(5). ஊரக வீட்டுவசதியை மேம்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவுதல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

(6). வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் வீடுகட்ட பயனுள்ள மனைகளை கண்டறிந்து கையகப்படுத்திய நிலங்களை முறையாகப் பகிர்வு செய்தல்.

(7). ஊரக வீட்டுவசதி திட்டங்களின் செயல்பாட்டுக்கு வழிகாட்டி, தேவையான தொழில்நுட்ப உதவியை, கிராம ஊராட்சிகளுக்கு அளித்தல், ஊரக வீட்டுவசதிக்காக பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டுமானத்திற்காக கட்டிடப்பொருட்கள் வழங்குதல், ஊரக வீட்டுவசதி திட்டங்களை திறம்பட செயல்படுத்த ஆய்வுக்குழுக்களை அமைத்து அதன் செயலை மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொள்ளல்.

(8). ஊரக வீட்டுவசதி திட்டங்களின் செயல்பாடுகள் சிறப்பான முறையில் நடைபெற மேற்பார்வையிடவும், கட்டுமானப் பணிகளின் தரத்தினை மேற்பார்வை செய்யவும் மற்றும் ஆய்வும் மேற்கொள்ளல்.

**மாவட்ட ஊராட்சிகள்**

(9).மாவட்டத்தில், ஊரக வீட்டுவசதிக்கான திட்டங்கள் தீட்டும்போது அம்மாவட்டத்தின் எதிர்கால தேவைகளை கருத்தினை கொண்டு, திட்டமிட்டு, மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் ஒரு வீடு என்ற கொள்கையை நிறைவேற்றலாம். இதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை தயாரித்து, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் இத்திட்டங்களை செயலாக்கலாம். மாவட்டத்திலுள்ள கட்டிட மையத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

(10).மாவட்ட ஊராட்சிகள் தங்கள் பகுதிகளிலுள்ள ஊரக வீட்டுவசதித் திட்டங்களின் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிவுரைகள் வழங்குதல்.

4. மேலே பத்தி 3—ல் (1) முதல் (10) வரை ஆணையிட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறப்பு அலுவலர், ஊரக வீட்டுவசதிக் கழகம் / கூட்டுறவுப் பதிவாளர் (வீட்டுவசதி) வீட்டுவசதி இணையம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என். கோவிந்தன்**
அரசு செயலாளர்